Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
RNI No.TNBIL/2021/81709
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935

மலர் 3 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 12, 2024 | இதழ் 272

# சட்டப்பிரிவு 370ஐ கொண்டு வருவோம் என சொல்லத் தயாரா? காஷ்மீர் தேர்தல் பிரச்சாரத்தில் காங்கிரசுக்கு மோடி சவால்

## "தேசிய ஜனநாயக கூட்டணி தான் மீண்டும் ஆட்சிக்கு வரும் என எதிர்க்கட்சிகள் நம்புகின்றன"



சென்னை, 12 ஏப்ரல் 2024: ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளித்த சட்டப்பிரிவு 370 ஐ திரும்பக் கொண்டு வருவோம் என சொல்ல காங்கிரஸ் தயாரா என பிரதமர் மோடி சவால் விடுத்துள்ளார்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் உதம்பூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் அவர் பேசுகையில், இந்தத் தேர்தல் வெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் மட்டுமல்ல; நாட்டில் பலமான அரசை அமைப்பதற்கான தேர்தலாகும்.

60 ஆண்டுகால பிரச்சினைகளை தீர்த்து வைப்பேன் என்று கூறியிருந்தேன். இங்குள்ள தாய்மார்கள் மற்றும் சகோதரிகளுக்கு நான் மரியாதை அளித்தேன். இரண்டு வேளை உணவுக்காக ஏழைகள் கவலைப்பட வேண்டியதில்லை என்று நான் உத்தரவாதம் அளித்தேன். இன்று ஜம்மு காஷ்மீரின் லட்சக்கணக்கான குடும்பங்களுக்கு அடுத்த 5 ஆண்டுகளுக்கு இலவச ரேஷன் பொருட்களுக்கான உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் ஆட்சி காலத்தில் ஷாபுர்கண்டி அணையை பல ஆண்டுகளாக முடக்கி வைத்தது உங்களுக்கு நினைவிருக்கும். ஜம்மு விவசாயிகளின் வயல்கள் காய்ந்து, கிராமங்கள் இருளில் மூழ்கின. அதேநேரத்தில், நமது ராவி ஆற்றின் தண்ணீர் பாகிஸ்தானுக்குப் போய்க்கொண்டிருந்தது. அந்த தண்ணீரை ஜம்மு விவசாயிகளுக்கு வழங்குவதற்கான உத்தரவாதத்தையும் நிறைவேற்றி இருக்கிறேன்.

காங்கிரஸ், தேசிய மாநாட்டுக் கட்சி, பிடிபி மற்றும் அனைத்து கட்சிகளும் ஜம்மு காஷ்மீரை பழைய காலத்துக்கு கொண்டு செல்ல விரும்புகின்றன. ஜம்மு காஷ்மீருக்கு இந்த கட்சிகள் செய்த அளவுக்கு சேதத்தை யாரும் ஏற்படுத்தவில்லை. இங்கு அரசியல் கட்சி என்பது குடும்பம் மற்றும் குடும்பத்துக்கானது.

அதிகாரத்துக்காக ஜம்மு காஷ்மீரில் சட்டப்பிரிவு 370 எனும் சுவரைக் கட்டிவிட்டார்கள். உங்கள் ஆசியோடு நான் அந்த சுவரை இடித்து, அந்தச் சுவரின் குப்பைகளையும் மண்ணில் புதைத்துவிட்டேன். இந்தியாவில் உள்ள காங்கிரஸ் உள்ளிட்ட எந்த ஒரு அரசியல் கட்சியாவது 370வது சட்டப்பிரிவை மீண்டும் கொண்டு வருவோம் என்று சொல்லத் தயாரா? ஒருவேளை அவர்கள் அவ்வாறு சொன்னால் நாடு அவர்களை திரும்பிக் கூட பார்க்காது.

நான் முன்னோக்கி சிந்திக்கிறேன். புதிய மற்றும் அற்புதமான ஜம்மு காஷ்மீரை உருவாக்குவதற்கான பணி என் முன் இருக்கிறது. ஜம்மு காஷ்மீரில் சட்டசபை தேர்தல் நடக்கும் காலம் தொலைவில் இல்லை.

ராமர் கோயில் என்பது பாஜகவுக்கு தேர்தல் பிரச்சினை என்று காங்கிரஸ் கூறுகிறது. ராமர் கோயில் ஒருபோதும் தேர்தல் பிரச்சினையாக இருந்ததில்லை. அது ஒரு தேர்தல் பிரச்சினையாக மாறாது. பாஜக பிறப்பதற்கு முன்பே ராமர் கோவில் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அந்நிய படையெடுப்பாளர்கள் நமது கோயில்களை அழித்த போது, இந்திய மக்கள் தங்கள் கோயில்களைக் காப்பாற்ற போராடினார்கள். காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் பெரிய பங்களாக்களில் வசித்து வந்தனர். ஆனால் கூடாரத்தில் இருந்த குழந்தை ராமருக்கு பிரம்மாண்ட ஆலயம் அமைக்க முயன்ற போது அதனை அவர்கள் எதிர்த்தார்கள்.

நாட்டின் பெரும்பான்மையான மக்களின் உணர்வுகளைப் பற்றி காங்கிரஸ் மற்றும் இந்தியா கூட்டணி கவலைப்படுவதில்லை. மக்களின் உணர்வுகளுடன் விளையாடி மகிழ்கிறார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

தேசிய ஜனநாயக கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வரும் என எதிர்க்கட்சிகள் கூட நம்புகின்றன. அதனால்தான் பல எதிர்க்கட்சித் தலைவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் இருந்து ஒதுங்கி வருகின்றனர் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "நடந்து முடிந்த மக்களவைத் தேர்தல்களில் பாஜக தனது பெரும்பான்மையைத் பயன்படுத்தி நாட்டை வலுப்படுத்தியது. ஆனால் காங்கிரஸ் தனது பெரும்பான்மையை தன்னுடைய குடும்பத்தைப் பலப்படுத்தவே பயன்படுத்தியது. ஊழல்வாதிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். பாஜக ஆட்சியில் உள்ள மாநிலங்களிலும்கூட ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

என்டிஏ கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வரும் என்று எதிர்க்கட்சிகள் கூட நம்புகின்றன, அதனால்தான் பல எதிர்க்கட்சித் தலைவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் இருந்து ஒதுங்கி வருகின்றனர். பலர் வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்பே மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் மீது குற்றஞ்சாட்டத் தொடங்கியுள்ளனர்.

அமலாக்க இயக்குநரகம் விசாரித்து வரும் ஊழல் வழக்குகளில் 3 சதவீதம் மட்டுமே அரசியலில் தொடர்புடையவர்கள். மீதமுள்ள 97 சதவீத வழக்குகள் அதிகாரிகள் மற்றும் குற்றவாளிகளுடன் தொடர்புடையவை. ஆனால் இது குறித்தும் தவறாக விமர்சிக்கப்படுகிறது. 2014 ம் ஆண்டு எனது தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்ததில் இருந்து ஊழலை ஒழிப்பதே முதன்மை குறிக்கோளாக உள்ளது.

உலகில் ஐந்தாவது பெரிய மற்றும் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடாக இந்தியா உள்ளது என்ற உண்மையை மக்கள் கவனத்தில் கொண்டிருக்கிறார்கள். 500 ஆண்டுகால காத்திருப்புக்குப் பிறகு அயோத்தியில் ராமர் கோயிலை கட்டியிருக்கிறோம். அதோடு, 370-வது சட்டப்பிரிவை நீக்கியது போன்ற பல்வேறு விஷயங்களை நாட்டின் வளர்ச்சிக்காக செய்துள்ளோம். பாஜக அதன் உத்தரவாதங்களை நிறைவேற்றியிருக்கிறது என்பதற்கு எங்களின் 10 ஆண்டுகால ஆட்சியே ஆதாரம்" எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், ஏழைகளின் பணம் இடைத்தரகர்களின் பாக்கெட்டுகளுக்கு செல்வதைத் தடுக்க நேரடி பலன் பரிமாற்றம் அமைப்பு செயல்பட்டு வருகிறது. இதன் விளைவாக, 10 கோடிக்கும் மேற்பட்ட போலி பயனாளிகளின் பெயர்களை நாங்கள் நீக்கியுள்ளோம். இதன் மூலம், அரசு ரூ. 22.75 லட்சம் கோடியை தவறான கைகளுக்கு செல்லாமல் காப்பாற்றி உள்ளது. 2014க்கு முன், 25,000 கோடி மதிப்புள்ள சொத்துகளை அமலாக்கத்துறை பறிமுதல் செய்தது, அதேசமயம் கடந்த 10 ஆண்டுகளில் அதற்கான பறிமுதல் ஒரு லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

2047-க்குள் வளர்ந்த இந்தியா என்ற எங்கள் தொலைநோக்கு பார்வையை நாங்கள் மக்களிடம் கொண்டு செல்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# விலைவாசி உயர்வே முக்கிய பிரச்சினை பா.ஜ.க. ஆட்சி முடிவுக்கான 'கவுண்ட்டவுன்' துவங்கிவிட்டது: முதல்வர் ஸ்டாலின்



சென்னை, 12 ஏப்ரல் 2024: பா.ஜ.க. ஆட்சி முடிவுக்கான 'கவுண்ட்டவுன்' தொடங்கிவிட்டது என்று முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தனது பதிவில் அவர் கூறியிருப்பதாவது:-

புகழ்பெற்ற லோக்நிதி ஆய்வு அமைப்பு, 2024 மக்களவைத் தேர்தலில் முக்கியப் பிரச்சினைகள் எவை என மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தியுள்ளது. அதில், 27 சதவீதம் பேர் வேலையின்மைதான் முக்கியப் பிரச்சினை என்றும், 23 சதவீதம் பேர் விலைவாசி உயர்வு என்றும், 55 சதவீதம் பேர் கடந்த 5 ஆண்டு பா.ஜ.க. ஆட்சியில் ஊழல் அதிகரித்துவிட்டதாகவும், ஏழை மக்களில் 76 சதவீதம் பேர் விலைவாசி உயர்வே இத்தேர்தலில் முக்கியப் பிரச்சினை என்றும் கூறியுள்ளனர்.

இதில் இருந்தே இந்த பாஜக ஆட்சியின் முடிவுக்கான 'கவுண்ட்டவுன்' ஆரம்பம் ஆகிவிட்டது.

அதிகரித்துவிட்ட ஊழல், கார்ப்பரேட்டுகளிடமே மீண்டும் மீண்டும் குவியும் செல்வம், தொடரும் பாகுபாடுகள் என மக்களின் அன்றாட வாழ்வாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில், பத்தாண்டுகால பா.ஜ.க. ஆட்சி படுதோல்வி அடைந்துவிட்டதை மக்கள் உணரத் தொடங்கி விட்டார்கள்.

'சிலரைச் சில காலம் ஏமாற்றலாம்; எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.",

# இயக்குனர் / கவிஞர் சீனு ராமசாமியின் கவிதை நூல் மாசி வீதியின் கல்சந்துகள்.




சென்னை, 12 ஏப்ரல் 2024: #மாசி_வீதியின்_கல்_சந்துகள் என்ற இத்தொகுப்பினைக் குறித்து எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் இப்படிச் சொல்கிறார்.

இந்தத் தொகுப்பில் ஐந்துவிதமான கவிதைகள் இடம் பெற்றுள்ளன. ஒன்று

கடந்தகால நினைவிலிருந்து எழும் காட்சிகளால் உருவாக்கபட்டது. இரண்டாவது நகரவாழ்வு

தரும் நெருக்கடிகளால் உருவானது. மூன்றாவது இயற்கையின் மீதான தீராத விருப்பத்தால்

எழுதப்பட்டது. நான்காவது கவிதை எழுதுதல் மற்றும் அதன் செயல்பாடுகள் பற்றியது. ஐந்தாவது

தன்னைச் சுற்றிய உலகின் சமகாலப் போக்குகளையும், அபத்தங்களையும் பற்றியது.

பெறுவதும் தருவதும் என்று ஒரு கவிதைக்குத் தலைப்பு வைத்திருக்கிறார். இந்தத் தொகுப்பிலுள்ள

எல்லாக் கவிதைகளையும் திறக்கும் கடவுச் சொல் இதுவே.

**வெளியீடு : டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ், பக்கம் : 256 விலை ; ரூ.320**
( GPay / PhonePay 9940446650 )

**இந்தியாவுக்குள் அஞ்சல் இலவசம்.**

# அண்ணா தி.மு.க.வின் நட்சத்திரப் பேச்சாளர் நடிகர் அருள்மணி மரணம்: எடப்பாடி இரங்கல்



சென்னை, 12 ஏப்ரல் 2024: நடிகரும், அண்ணா தி.மு.க.வின் நட்சத்திரப் பேச்சாளருமான அருள்மணி மாரடைப்பு காரணமாக நேற்றிரவு (வியாழன்கிழமை) சென்னையில் காலமானார். அவரது மறைவிற்கு அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

நடிகர் அருள்மணி தமிழ் சினிமாவில் வில்லன், குணச்சித்திர நடிகர் எனப் பல திரைப்படங்களில் நடித்துள்ளார். தங்கர் பச்சானின் 'அழகி' திரைப்படம் அருள்மணியின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனலாம். இதுவரை அருள்மணி, அழகி, தென்றல், பொன்னுமணி, தர்மசீலன், கருப்பு ரோஜா, வேல், மருதமலை, கற்றது தமிழ், வன யுத்தம், சிங்கம் 2, தாண்டவகோனே, லிங்கா உள்ளிட்ட 90 படங்களில் நடித்துள்ளார்.

இவர் ஏறக்குறைய அனைத்து முன்னணி நடிகர்களுடனும் நடித்துள்ளார். மேலும், வேல் திரைப்படத்தில் கலாபவன் மணிக்கு அடுத்த படியாக, வில்லனாக நடித்து ரசிகர்கள் மனதைக் கவர்ந்தவர். தற்போது 65 வயதாகும் இவருக்குத் திருமணமாகி ஒரு மகனும், மகளும் உள்ளனர். நடிப்பு மட்டுமின்றி அரசியலில் கொண்ட ஈடுபாடு காரணமாக, அதிமுகவின் நட்சத்திரப் பேச்சாளராகவும் இருந்தார். மேலும், நடிப்பு மற்றும் இயக்குநர் பயிற்சி பள்ளி ஒன்றையும் நடத்தி வந்தார்.

தற்போது, நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், கடந்த 10 நாட்களாக அதிமுகவுக்கு ஆதரவாக வெளியூர்களுக்குச் சென்று பிரச்சாரம் செய்து வந்தார். அதையடுத்து நேற்று பிரச்சாரம் முடிந்து சென்னைக்குத் திரும்பி வந்த அருள்மணி, சைதாப்பேட்டையில் உள்ள அவரது வீட்டில் ஓய்வில் இருந்துள்ளார். இந்நிலையில், நேற்று மாலை 4.30 மணிக்கு அருள்மணிக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதைத்தொடர்ந்து, உடனடியாக சென்னையில் உள்ள ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று இரவு 9.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதையடுத்து இவரது உடல் அஞ்சலிக்காக வீட்டில் வைக்கப்பட்டுள்ளது. இன்று மாலை நல்லடக்கம் செய்யப்படும் என கூறப்படுகிறது.

அருள்மணியின் மறைவு அரசியல் மற்றும் திரைத்துறை வட்டாரங்களில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இன்று அவருக்கு இறுதிச்சடங்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அரசியல் பிரமுகர்கள், திரையுலகினர், ரசிகர்கள் என பலரும் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

நடிகர் அருள்மணி மறைவுக்கு அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள் இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:

தலைமைக் கழக நட்சத்திரப் பேச்சாளரும், திரைப்பட நடிகருமான எம்.எஸ். அருள்மணி மாரடைப்பால் மரணமடைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு மிகுந்த வருத்தமுற்றேன். நடிகர் அருள்மணி 90-க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் வில்லனாகவும், குணச்சித்திர கதாபாத்திரங்களிலும் நடித்து மக்கள் மனதில் இடம்பிடித்தவர். கழகத்தின் மீதும், தொடர்ந்து கழகத் தலைமையின் மீதும் விசுவாசம் கொண்டு, தலைமைக் கழக நட்சத்திரப் பேச்சாளராக கழகத்தின் கொள்கைகளை நாட்டு மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் பல்வேறு பொதுக்கூட்டங்கள் வாயிலாக எடுத்துரைத்து, சிறந்த முறையில் கழகப் பணிகளை ஆற்றியவர்.

19.4.2024 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலையொட்டி நடிகர் அருள்மணி, தமிழ் நாடு முழுவதும் கழக வேட்பாளர்களையும், கழகத்தின் தலைமையிலான கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களையும் ஆதரித்து மேற்கொண்ட தேர்தல் பிரச்சாரப் பணிகள் மிகவும் பாராட்டுதலுக்கு உரியவை. அன்னாரது இழப்பு கழகத்திற்கும், திரைப்படத் துறையினருக்கும் மிகுந்த பேரிழப்பாகும்.

அன்புச் சகோதரர் நடிகர் அருள்மணியை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும், திரைப்படத் துறையினருக்கும் இந்தத் துயரத்தைத் தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தியையும், தைரியத்தையும் அளிக்க வேண்டும் என்றும், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் அமைதிபெறவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# மயிலாடுதுறையைத் தொடர்ந்து அரியலூரில் சிறுத்தை நடமாட்டம்




சென்னை, 12 ஏப்ரல் 2024: மயிலாடுதுறையைத் தொடர்ந்து அரியலூரில் சிறுத்தை நடமாட்டம் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

மயிலாடுதுறை கூறைநாடு செம்மங்களம் பகுதியில் கடந்த 2-ம் தேதி இரவு சிறுத்தை நடமாட்டம் இருந்ததை பொதுமக்கள் பார்த்துள்ளனர். இதையடுத்து அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி. பதிவுகளை ஆய்வு செய்த வனத்துறை, தீயணைப்பு துறை, காவல் துறையினர் சிறுத்தையை தேடும் பணியை தொடங்கினர். இன்றுடன் 10 நாட்களாக அப்பகுதிகள் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் தேடுதல் பணி நடைபெற்று வருகிறது. சிறுத்தையின் நடமாட்டம் பெரும்பாலும் ஆறு மற்றும் ஓடைகள் வழியாகவே இருக்கிறது.

நேற்று முன்தினம் காலை காஞ்சிவாய் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களில் பொருத்தப்பட்ட சிசிடிவி கேமராக்களை வனத்துறையினர் ஆய்வு செய்தனர். மேலும் சிறுத்தை பிடிப்பதற்காக வைக்கப்பட்ட கூண்டுகளிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில், மயிலாடுதுறை மாவட்டத்தில் நேற்று மதியம் முதல் சிறுத்தையின் நடமாட்டம் குறித்து எந்த தகவலும் பதிவாகவில்லை என வனத்துறையினர் தெரிவித்தனர்.

இதனால் சிறுத்தை மயிலாடுதுறை நகரை விட்டு வெளியேறி விட்டதோ? என்ற சந்தேகமும் எழுந்தது.

இந்நிலையில் மயிலாடுதுறையை தொடர்ந்து, அரியலூரிலும் சிறுத்தை நடமாட்டம் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

செந்துரை அரசு மருத்துவமனைக்குள் சிறுத்தை செல்லும் சிசிடிவி காட்சி வெளியிடப்பட்டுள்ளது.

# உச்சத்தில் தங்க விலை இன்று ரூ.640 உயர்ந்து சவரன் ரூ.54 ஆயிரத்தை கடந்தது



சென்னை, 12 ஏப்ரல் 2024: சென்னையில் இன்று தங்கத்தின் விலை, பவுனுக்கு ரூ.640 அதிகரித்து ஒரு பவுன் தங்கம் ரூ.54,440க்கு விற்பனையாகிறது.

கடந்த சில நாட்களாக தங்கம் விலை எதிர்பார்க்காத வகையில் உயர்ந்துக்கொண்டே செல்கிறது. இதனால் நகை வாங்க நினைக்கும் மக்கள் கலக்கமடைந்தனர்.

கடந்த ஆண்டு மார்ச் மாத தொடக்கத்தில் இருந்து ஏற்ற இறக்கத்தோடு தங்கம் விலை உள்ளது. கடந்த 5-ந் தேதி ஒரு சவரன் தங்கம் ரூ.52 ஆயிரத்தை தாண்டியது. அதனைத் தொடர்ந்து விலை அதிகரித்து கொண்டே வந்து, ஒவ்வொரு நாளும் புதிய உச்சத்தை எட்டி வருகிறது. அந்தவகையில் நேற்றும் தங்கம் விலை சவரனுக்கு ரூ.160 உயர்ந்த நிலையில், இன்று மேலும் உயர்ந்துள்ளது.

இன்று 22 கேரட் ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.640 உயர்ந்து ஒரு பவுன் ரூ.54,440க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிராமுக்கு ரூ.80 உயர்ந்து ரூ.6,805க்கு விற்பனை ஆகிறது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.0.50 உயர்ந்து ஒரு கிராம் ரூ.90க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.500 உயர்ந்து, ரூ.90,000க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# பிரதமர் மோடியை வேடந்தாங்கல் பறவை என விமர்சிப்பதா? மு.க.ஸ்டாலினுக்கு நிர்மலா சீதாராமன் பதிலடி



சென்னை, 12 ஏப்ரல் 2024: பிரதமர் மோடியை வேடந்தாங்கல் பறவை என விமர்சிப்பதா? - ஸ்டாலினுக்கு நிர்மலா சீதாராமன் பதிலடி கொடுத்து பேசினார்.

கிருஷ்ணகிரி பா.ஜ.க. வேட்பாளர் நரசிம்மனை ஆதரித்து மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் ஒசூரில் பிரசாரம் மேற்கொண்டு வாக்கு சேகரித்தார்.

அப்போது மந்திரி நிர்மலா சீதாராமன் பேசியதாவது:-

வெயில் கொளுத்துகின்ற நேரத்தில் அதனை தாங்கிக்கொண்டும், வேலை நாட்களிலும் எங்களின் உரையை கேட்க இவ்வளவு பேர் வந்திருப்பதால் மகிழ்ச்சி அளிக்கிறது. இன்னும் 2 நாட்களில் புதிய வருடம் பிறக்கிறது. மக்களுக்கு தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று உங்கள் முன்பு பேச வாய்ப்பு கிடைத்ததற்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

வருகின்ற மக்களவை தேர்தலில் பாஜகவை வெற்றிபெற செய்ய வேண்டும். தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு பிரதமர் மோடி எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்துள்ளார். கடந்த 10 ஆண்டுகளில் கிருஷ்ணகிரியில் தொழில் வளர்ச்சி பெருகி உள்ளது. தமிழ்நாட்டில் ராணுவ தளவாடம் கொண்டு வந்ததால் பல நன்மைகள் கிடைத்துள்ளன.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். தற்போது 2.75 லட்சம் குடும்பத்திற்கு குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தால் 2.5 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

வேடந்தாங்கல் சரணாலயத்துக்கு பறவைகள் வருவதுபோல பிரதமர் மோடி சீசன் காலத்தில் மட்டும் தமிழ்நாட்டிற்கு வருவதாக முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறுகிறார். யார் வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் பயணம் செய்யலாம். அந்த வார்த்தையை பயன்படுத்துவதே தவறு.

தமிழ்நாட்டில் போதைப்பொருள் பழக்கம் அதிகரித்துள்ளது. போதைப் பொருட்கள் மூலம் கோடிக்கணக்கான பணத்தை திமுக சம்பாதித்துள்ளது. போதைப்பொருள் கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்ட ஜாபர் சாதிக் திமுக குடும்பத்துடன் தொடர்பு வைத்துள்ளதற்கு நிறைய "ஆதாரம்" இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# காங்கிரஸ் தலைமையில் ஆட்சி அமைந்தால் காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டப்படும்'' - சித்தராமையா அதே கூட்டணியில் இருக்கும் திமுகவின் தலைவரும், முதல்வருமான ஸ்டாலின் எதிர்ப்போ, கண்டனமோ தெரிவிக்கவில்லை அவரது இந்த துரோகத்திற்கு மக்களவைத் தேர்தலில் தமிழக மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள் - அன்புமணி ராமதாஸ்

சென்னை, 12 ஏப்ரல் 2024: பெங்களூர் தெற்கு தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் சவுமியா ரெட்டியை ஆதரித்து பிரச்சாரம் செய்த கர்நாடக முதல்வர் சித்தராமையா ''மேகதாதுவில் அணை கட்ட மத்திய பாஜக அரசு அனுமதி அளிக்கவில்லை. மத்தியில் காங்கிரஸ் தலைமையில் ஆட்சி அமைந்தால் காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டப்படும்'' என்று கூறியிருக்கிறார். சித்தராமையாவின் இந்த பேச்சு கண்டிக்கத்தக்கது என்று பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியிருக்கிறார்.

சித்தராமையாவின் பேச்சு குறித்து அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படியும், உச்சநீதிமன்றத் தீர்ப்புகளின்படியும் காவிரி ஆற்றின் குறுக்கே தமிழ்நாட்டின் ஒப்புதல் இல்லாமல் எந்த அணையும் கட்ட முடியாது. மத்திய நீர்வளத்துறை அமைச்சர்களிடமிருந்து இதற்கான வாக்குறுதியை நாடாளுமன்றத்தில் பல முறை நான் பெற்றுள்ளேன்.



உண்மை நிலை இவ்வாறு இருக்க மத்தியில் காங்கிரஸ் ஆட்சி அமைந்தால் மேகதாது அணை கட்டப்படும் என்று சித்தராமையா கூறுவது மத்திய அரசின் அதிகாரத்தை தவறாகவும், தமிழகத்திற்கு எதிராகவும் பயன்படுத்துவது ஆகும். சித்தராமையாவின் இந்த பேச்சு கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது ஆகும்.

காங்கிரஸ் ஆட்சியில் மேகதாது அணையை கட்டியே தீருவோம் என்று சித்தராமையா அறிவித்து 3 நாட்களாகியும், அதே கூட்டணியில் இருக்கும் திமுகவின் தலைவரும், தமிழக முதலமைச்சருமான ஸ்டாலின் எதிர்ப்போ, கண்டனமோ தெரிவிக்கவில்லை. தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் மேகதாது விவகாரத்தில் தமிழ்நாட்டின் நலன்களைக் காக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் மு.க.ஸ்டாலினுக்கு உண்டு. ஆனாலும் அவர் அமைதியாக இருப்பதன் பொருள் காங்கிரசின் நலன்களுக்காகவும், கர்நாடகத்தின் நலன்களுக்காகவும் காவிரியில் தமிழ்நாட்டின் உரிமைகளை தாரைவார்க்கத் துணிந்து விட்டார் என்பது தான். அவரது இந்த துரோகத்திற்கு மக்களவைத் தேர்தலில் தமிழக மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள். இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

# பண்டிகை மகிழ்ச்சியை வெளிப்படுத்துங்கள்: ஃபேபிண்டியாவின் துடிப்பான புத்தாண்டு புது வரவுகள் உங்களுக்காக !

சென்னை, 12 ஏப்ரல் 2024: ஃபேபிண்டியாவின் புத்தாண்டு புது வரவுகளுடன் புத்தாண்டில் காலடி எடுத்துவைத்து, உங்கள் புதுவித ஆடை அணியும் பாணியுடன் உங்களை அழகை வெளிப்படுத்துங்கள். அழகிய மிக நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்ட மற்றும் செழுமையான துணிகளால் வடிவமைக்கப்பட்ட எங்கள் தரமான அழகான உடைகளுடன் விழாக்களை கொண்டாடுங்கள். ஹேண்ட் பிளாக் பிரிண்ட்ஸ் அல்லது ஆடம்பரமான பட்டு என எதுவாக இருந்தாலும், ஒவ்வொரு ஆடையும் கைவினைத்திறன் மற்றும் பாரம்பரியத்திற்கான எடுத்துக்காட்டாக ஃபேபிண்டியாவின் நேர்த்தியான ஆடைகளின் அழகுடன் புத்தாண்டை கொண்டாடுங்கள்.









**ஆரஞ்சு சில்க் பிண்டக் ஸ்லிம் ஃபிட் லாங் குர்தா**

எம் ஆர் பி ரூ.2,750 ஆடம்பரமான பட்டு மற்றும் நேர்த்தியான பிண்டக் விவரங்களுடன் வடிவமைக்கப்பட்ட இந்த குர்தா, புத்தாண்டில் செழுமையை உங்களுக்கு வழங்கும்.

**ஊதா பருத்தி பட்டு சாந்தேரி நெய்த புடவை**

எம் ஆர் பி ரூ.4,559 இந்த ஊதா நிறத்தில் சாந்தேரியில் நெய்யப்பட்ட மற்றும் ஜரி பார்டர் புடவை உங்களை சிரமமின்றி நேர்த்தியாகவும், விழாக்களுக்கு அழகாகவும் தோற்றமளிக்கும்.

**டீல் விஸ்கோஸ் சில்க் ஹேண்ட் பிளாக் அச்சிடப்பட்ட ஜாக்கெட்**

எம் ஆர் பி ரூ.1,399 இந்த ஹேண்ட் பிளாக் அச்சிடப்பட்ட ஜாக்கெட் மூலம் உங்கள் சிறியவருக்கு புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு நேர்த்தியை சேர்க்கும் என்பது உறுதி.

**மஞ்சள் விஸ்கோஸ் சில்க் ஹேண்ட் பிளாக் அச்சிடப்பட்ட நீண்ட குர்தா**

எம் ஆர் பி ரூ.1,699 இந்த துடிப்பான குர்தா, சிக்கலான ஹேண்ட் ப்ளாக் பிரிண்டிங்கைக் கொண்டுள்ளது, இது சிறிய குழந்தைகளுக்கு பண்டிகைக்கு ஏற்ற உடையாகும்.

# சாம்சங் கேலக்ஸி எம்55 5ஜி, கேலக்ஸி எம்15 5ஜி ஆகியவற்றை பிரிவில் முன்னணி சூப்பர் அமோல்ட் பிளஸ் டிஸ்ப்ளே, சக்திவாய்ந்த செயலி மற்றும் ஸ்டைலிஷ் வடிவமைப்புடன் இந்தியாவில் வெளியிடுகிறது

சென்னை, 12 ஏப்ரல் 2024: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் மின்னணு பிராண்டான சாம்சங், கேலக்ஸி எம்55 5ஜி மற்றும் கேலக்ஸி எம்15 5ஜி ஆகிய இரண்டு அசுர சாதனங்களை அறிமுகப்படுத்துவதாக இன்று அறிவித்தது. மிகவும் பிரபலமான கேலக்ஸி எம் தொடரின் சமீபத்திய சேர்த்தல்கள், சூப்பர் சுப்பர் அமோல்ட் பிளஸ் டிஸ்ப்ளே, மான்ஸ்டர் பேட்டரி மற்றும் சக்திவாய்ந்த செயலிகளுடன் கூடிய சிறந்த ஸ்மார்ட்போன் அனுபவத்தை பயனர்களுக்கு வழங்குகிறது. "சாம்சங் தத்துவத்திற்கு ஏற்றது போல் உண்மையாக, புதிய கேலக்ஸி எம்55 5ஜி மற்றும் கேலக்ஸி எம்15 5ஜி மூலம் புதுமையின் எல்லைகளை நாங்கள் முன்வைக்கிறோம், இளம் எம் இசட் நுகர்வோரின் எல்லையற்ற ஆர்வங்களை ஆற்றுவதற்கு தயாராக இருக்கும் இரண்டு பிரமிப்பூட்டும் சாதனங்கள். சூப்பர் அமோல்ட் பிளஸ் டிஸ்ப்ளே, ஸ்டைலான நேர்த்தியான வடிவமைப்பு, சக்திவாய்ந்த ஸ்னாப்டிராகன் செயலி மற்றும் நான்கு தலைமுறை ஓஎஸ் மேம்படுத்தல்கள் மற்றும் ஐந்து வருட பாதுகாப்பு புதுப்பிப்புகளின் ஒப்பிடமுடியாத வாக்குறுதியுடன் இணைந்து, கேலக்ஸி எம்55 5ஜி மற்றும் அசுரன் பயனர் அனுபவத்தை நாங்கள் உறுதிசெய்கிறோம். கேலக்ஸி எம்15 5ஜி," என்று சாம்சங் இந்தியாவின் எம் எக்ஸ் பிரிவின் துணைத் தலைவர் ஆதித்யா பப்பர் கூறினார்.

**தனித்துவமான வடிவமைப்பு**

கேலக்ஸி எம்55 5ஜி மற்றும் கேலக்ஸி எம்15 5ஜி ஆகியவை கேலக்ஸி சிக்னேச்சர் வடிவமைப்பைக் கொண்டுள்ளன, நேர்த்தியையும் நுட்பத்தையும் வெளிப்படுத்துகின்றன. கேலக்ஸி எம்55 5ஜி மிகவும் நேர்த்தியான மற்றும் குறைந்த எடை கொண்டது, 7.8 எம்எம் அகலம் மட்டுமே உள்ளது, இது பயன்படுத்த மிகவும் பணிச்சூழலியல் செய்கிறது. கேலக்ஸி எம்55 5ஜி இரண்டு புத்துணர்ச்சியூட்டும் வண்ணங்களில் கிடைக்கும் - வெளிர் பச்சை மற்றும் டெனிம் பிளாக். கேலக்ஸி எம்55 5ஜி ஆனது சிமீறீமீஉமீவீணீறீ புளு, ஸ்டோன் கிரே மற்றும் புளு டோபாஸ் உள்ளிட்ட மூன்று ஸ்டைலான வண்ணங்களில் கிடைக்கும்.

**மான்ஸ்டர் செயல்திறன்**

கேலக்ஸி எம்55 5ஜி ஆனது 4 என்எம்அடிப்படையிலான குவால்காம் ஸ்னாப்டிராகன் 7 ஜென்1 செயலி மூலம் இயக்கப்படுகிறது, இது வேகமான மற்றும் ஆற்றல் - திறனுள்ளதாக்குகிறது, இது பல பணிகளைச் சீராகச் செய்ய உங்களை அனுமதிக்கிறது. செயலி உயர்தர ஆடியோ




மற்றும் காட்சிகளுடன் அதிவேக இணைப்புடன் மான்ஸ்டர் மொபைல் கேமிங் அனுபவத்தை வழங்குகிறது. 5ஜி இன் இறுதி வேகம் மற்றும் இணைப்பின் மூலம், பயனர்கள் எங்கு சென்றாலும் முழுமையாக இணைந்திருக்க முடியும், வேகமான பதிவிறக்கங்கள், மென்மையான ஸ்ட்ரீமிங் மற்றும் தடையில்லா உலாவல் ஆகியவற்றை அனுபவிக்க முடியும். கேலக்ஸி எம்55 5ஜி ஆனது மீடியா டெக் டைமென்சிட்டி 6100+ மூலம் இயக்கப்படுகிறது, இது தேவைப்படும் பணிகளை எளிதாகக் கையாளும் திறன் கொண்டது.

**மான்ஸ்டர் பேட்டரி**

கேலக்ஸி எம்55 5ஜி ஆனது 5000 எம்ஏஹச் பேட்டரியில் நீண்ட நேரம் உலாவுதல், கேமிங் மற்றும் அதிக நேரம் பார்ப்பது ஆகியவற்றை செயல்படுத்துகிறது. கேலக்ஸி எம்55 5ஜி ஆனது 45 டபுள்யூ சூப்பர்-ஃபாஸ்ட் சார்ஜிங்கை ஆதரிக்கிறது, இது பயனர்களுக்கு குறைந்த நேரத்தில் அதிக சக்தியை அளிக்கிறது. கேலக்ஸி எம்55 5ஜி ஆனது செக்மென்ட்-சிறந்த 6000 எம்ஏஹச் பேட்டரியுடன் வருகிறது, இது ஸ்மார்ட்போனை இரண்டு நாட்கள் வரை சக்தியூட்டக்கூடியது, பயனர்கள் தங்களுக்குப் பிடித்தமான பொழுதுபோக்கை அதிகமாக அனுபவிக்க அனுமதிக்கிறது மற்றும் நாள் முழுவதும் அவர்களை இணைக்கவும் உற்பத்தி செய்யவும் அனுமதிக்கிறது.

**மான்ஸ்டர் டிஸ்பிளே**

கேலக்ஸி எம்55 5ஜி ஆனது 120 ஹச்இசட் புதுப்பிப்பு வீதத்துடன் கூடிய 6.7"முழு ஹச்டி+ சூப்பர் அமோல்ட் பிளஸ் டிஸ்ப்ளேவைக் கொண்டுள்ளது, இது அதிவேகமான பார்வை அனுபவத்தை வழங்கும் உயர்தர வண்ண மாறுபாட்டை வழங்குகிறது. கேலக்ஸி எம்55 5ஜி ஆனது 1000 நிட்ஸ் உயர் பிரைட்னஸ் பயன்முறை மற்றும் விஷன் பூஸ்டர் தொழில்நுட்பத்துடன் வருகிறது, இது பயனர்கள் பிரகாசமான சூரிய ஒளியில் கூட தங்களுக்கு பிடித்த உள்ளடக்கத்தை அனுபவிக்க முடியும் என்பதை உறுதி செய்கிறது. கேலக்ஸி எம்55 5ஜி ஆனது செக்மென்ட்-சிறந்த 6.5" சூப்பர் அமோல்ட் டிஸ்ப்ளே கொண்டுள்ளது, இது சமூக ஊடக ஊட்டங்கள் மூலம் ஸ்க்ரோலிங் செய்கிறது, வெளிப்புற அமைப்புகளில் கூட, தொழில்நுட்ப ஆர்வலரான சென் இசட் மற்றும் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களுக்கு ஒரு விருந்தாக அமைந்துள்ளது.

**மான்ஸ்டர் கேமரா**

கேலக்ஸி எம்55 5ஜி ஆனது கை நடுக்கம் அல்லது தற்செயலான குலுக்கல்களால் ஏற்படும் மங்கலான படங்களை நீக்கும் உயர் தெளிவுத்திறன் மற்றும் ஷேக்-ஃப்ரீ வீடியோக்கள் மற்றும் புகைப்படங்களை எடுக்க 50 எம்பி (ஓஐஎஸ்) நோ ஷேக் கேமராவைக் கொண்டுள்ளது. கேமரா அமைப்பில் 8எம்பி அல்ட்ரா-வைட் லென்ஸ் மற்றும் 50 எம்பி உயர் தெளிவுத்திறன் கொண்ட முன் கேமரா விரிவான, கூர்மையான செல்ஃபிக்களுக்கானது. கேலக்ஸி எம்55 5ஜி ஆனது நைட்டோகிராபி உடன் வருகிறது, பிக்சல் தொழில்நுட்பத்திற்கு நன்றி, பிரமிக்க வைக்கும் குறைந்த-ஒளி காட்சிகளையும் வீடியோக்களையும் கைப்பற்ற பயனர்களை அனுமதிக்கிறது. கேலக்ஸி எம்55 5ஜி இன் கேமராவில் ஏஐ-மேம்படுத்தப்பட்ட அம்சங்களான இமேஜ் கிளப்பர் மற்றும் ஆப்ஜெக்ட் இரைசர் கேலக்ஸி எம்55 5ஜி ஆனது 50 எம்பி டிரிபிள் கேமரா அமைப்பை வீடியோ டிஜிட்டல் இமேஜ் ஸ்டெபிலைசேஷன் (விடிஐஎஸ்) உடன் கொண்டுள்ளது. கேலக்ஸி எம்55 5ஜி மிருதுவான மற்றும் தெளிவான செல்ஃபிக்களுக்காக 13எம்பி முன் கேமராவையும் கொண்டுள்ளது.

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# 2024 ஏப்ரல் 12 அன்று தொடங்கும் கிரீன் ஹைடெக் வென்ச்சர்ஸ் லிமிடெட்-ன் ஐபிஓ




சென்னை, 12 ஏப்ரல் 2024: பெட்ரோலியம் அடிப்படையிலான பல்வேறு தயாரிப்புகளது வர்த்தக செயல்பாட்டில் கிரீன் ஹைடெக் வென்ச்சர்ஸ் ஈடுபட்டு வருகிறது. அரசுக்கு சொந்தமான டிஸ்டில்லரி ஆலைகளில் எத்தனால் உற்பத்திக்கான இயக்க செயல்பாட்டுடன் பராமரிப்புக்கான ஒப்பந்த பணியையும் நிறுவனம் திறம்பட மேற்கொண்டுவருகிறது. 2024 ஏப்ரல் 12-ஆம் தேதியன்று தனது நிறுவனத்தின் பொது பங்கு வெளியீட்டிற்கான ஐபிஓ வெளியீடு நிகழவிருப்பதை இந்நிறுவனம் அறிவித்திருக்கிறது. ரூ. 10 என்ற முகமதிப்புள்ள ஒரு ஈக்விட்டி பங்கை ரூ. 50 என்ற விலையில் 1260000 பங்குகள் வெளியீடு வழியாக ரூ. 6.30 கோடி ரூபாயை மூலதனமாக திரட்ட இந்நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது. இந்நிறுவனத்தின் பங்குகள் மும்பை பங்குச் சந்தையின் எஸ்எம்ஈ தளத்தில் பட்டியலிடப்படவுள்ளன.

ஈக்விட்டி பங்குகளின் ஒதுக்கீடுக்கான திட்டம்: ஹெச்என்ஐ பிரிவுக்கு 5,97,000 ஈக்விட்டி பங்குகள், தனிப்பட்ட சில்லறை முதலீட்டாளர்களுக்கு 5,97,000 ஈக்விட்டி பங்குகள், சந்தை உருவாக்குனர்களுக்கு 66,000 ஈக்விட்டி பங்குகள்.

இந்த ஐபிஓ மூலம் திரட்டப்படும் மொத்த நிகரத் தொகையானது, இந்நிறுவனத்தின் நடப்பு மூலதன தேவைப்பாடுகளுக்கும் மற்றும் பொது கார்ப்பரேட் செலவுகளுக்கும் பயன்படுத்தப்படும். 2024 ஏப்ரல் 12 அன்று தொடங்கும் இந்த ஐபிஓ வெளியீடு 2024 ஏப்ரல் 16 அன்று நிறைவடையும்.

இந்த ஐபிஓ வெளியீட்டிற்கான முதன்மை மேலாளராக பீலைன் கேபிட்டல் அட்வைஸர்ஸ் பிரைவேட் லிமிடெட்-ம் மற்றும் இதன் பதிவாளராக ஸ்கைலைன் ஃபைனான்ஷியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்-ம் செயல்படுகின்றன.

பல்வேறு வகைப்பட்ட தொல்துறை நிறுவனங்களுக்கு பெட்ரோலியம் அடிப்படையிலான பல்வேறு தயாரிப்பு பொருட்களின் வர்த்தகத்தில் கிரீன் ஹைடெக் வென்ச்சர்ஸ் லிமிடெட் (ஜி வி எல்) ஈடுபட்டு வருகிறது. உயிரி எரிபொருள் எனப்படும் பயோஃபியூயல், பிட்டுமென், இலகுரக அடர்த்தியுள்ள எண்ணெய்கள், ஃபர்னஸ் எண்ணெய்கள் போன்றவை இந்நிறுவனங்கள் வழங்கிவரும் தயாரிப்புகளது தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. அரசாங்கத்திற்கு சொந்தமான டிஸ்டில்லர்களில் எத்தனால் உற்பத்திக்கான இயக்க செயல்பாட்டிலும் மற்றும் பராமரிப்பு பணியிலும் ஜாப் ஒர்க் அடிப்படையிலும் இந்நிறுவனம் செயல்படுகிறது. தான் இயங்கும் சந்தையின் தேவைகளை நன்றாக புரிந்துவைத்திருக்கும் கிரீன்டெக் புதிய தொழில்நுட்பம் மற்றும் சந்தை போக்குகளுக்கேற்ப தனது தயாரிப்புகளது தொகுப்பையும், பணியாளர்களது குழுவையும் தொடர்ந்து மேம்படுத்திவருகிறது.

இந்தியாவெங்கிலும் எரிபொருட்கள் மற்றும் பிற மாற்று வழிமுறைகளின் நுகர்வோர்களுக்கு சிறப்பான பிசினஸ் தீர்வுகளையும், சேவைகளையும் ஜி வி எல் வழங்கிவருகிறது. இந்நிறுவனத்திற்கென்று சொந்தமாக உற்பத்தி தொழிலகம் இல்லை என்ற போதிலும், எத்தனால் உற்பத்திக்கான ஒப்பந்த பணி ஆற்றும் நிறுவனமாக அரசுக்கு சொந்தமான டிஸ்டில்லரி ஆலைகளில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கான டெண்டர்களைப் பெற்று தனது வர்த்தக செயல்பாடுகளை இது சிறப்பாக மேற்கொள்கிறது.

# முன்னுரிமை அடிப்படையில் ஈக்விட்டி பங்குகள் மற்றும் வாரண்ட்டுகள் ஒதுக்கீட்டிற்கு என் ஈ சி சி லிமிடெட் - ன் இயக்குனர் குழு ஒப்புதல்

சென்னை, 12 ஏப்ரல் 2024: நார்த் ஈஸ்டர்ன் கேரியிங் கார்ப்பரேஷன் லிமிடெட், உள்நாட்டு, சர்வதேச, வணிக மற்றும் தொழில்துறை சரக்கு போக்குவரத்தில் முன்னணி நிறுவனமாக இயங்கி வரும் நிலையில், 6,70,000 ஈக்விட்டி பங்குகள் மற்றும் பங்குகளாக மாற்றக்கூடிய 39,55,062 பங்கு (ஷேர்) வாரண்டுகளை முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வதற்கு அதன் இயக்குநர்கள் குழு ஒப்புதல் அளித்திருப்பதை அறிவித்திருக்கிறது. ரூ. 10/- முக மதிப்புள்ள ஈக்விட்டி பங்கு ரூ.22.05 என்ற ப்ரீமியத்தோடு சேர்த்து, ரூ. 32.05/- என்ற விலையில், நிறுவனங்கள் சட்டம், 2013, செபி (ஐ சி டி ஆர்) விதிமுறைகள் மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்டங்களின்படி, ஒரு தனிப்பட்ட ஒதுக்கீடு முறையில் முன்னுரிமை வெளியீடாக ரொக்கத்தொகைக்கு பரிசீலனைக்காக, புரமோட்டர்கள் மற்றும் புரமோட்டர்கள் அல்லாத பிற நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதற்கு முன்னதாக, கெய்ல் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்திடம் இருந்து மூன்று ஆண்டுகள் காலஅளவிற்கு பாலிமர் போக்குவரத்துக்காக ரூ.52.48 கோடி என்ற ஒப்பந்த மதிப்பின் கீழ், ஆர்டரை தான் பெற்றிருப்பதை இந்நிறுவனம் அறிவித்திருந்தது. மின்சார வாகனங்கள் மூலம் டிரக் போக்குவரத்து நோக்கத்திற்காக ரூ. 20 கோடி என்ற தொகை வரை, 20 % பங்குகள்/பத்திரங்களில் முதலீடு செய்வதற்கு லாஜிஸ்டிக் மேனேஜ்மென்ட் பிரைவேட் லிமிடெட் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இந்நிறுவனம் சமீபத்தில் மேற்கொண்டிருக்கிறது. தொடங்கப்பட்ட நாளிலிருந்து, நெகிழ்வுத்திறனுள்ள விரைவாக பதில்வினையாற்றக்கூடிய மற்றும் கட்டுபடியாகக்கூடிய கட்டணங்களில் தனது வாடிக்கையாளர்களுக்கு நார்த் ஈஸ்டர்ன் கேரியிங் கார்ப்பரேஷன் சேவைகளை வழங்கி வருகிறது. அதன் வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மிகச்சிறப்பான தீர்வுகளை வழங்க, அதன் ஆழமான அனுபவத்தையும், செயல்பாட்டுத்திறனையும் இந்நிறுவனம் பயன்படுத்துகிறது. சரக்குகளுக்கான கிடங்கு சேவைகளுடன் உள்நாட்டு, சர்வதேச, வணிக, மற்றும் தொழில்துறை சரக்கு போக்குவரத்தில் நிபுணத்துவம் பெற்றிருக்கும் நார்த் ஈஸ்டர்ன் கேரியிங் கார்ப்பரேஷன், சரக்குப் போக்குவரத்தில் இந்தியாவின் முன்னணி நிறுவனமாக தன்னை வலுவாக நிலைநிறுத்திக் கொண்டுள்ளது

ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு சரக்குகளை கொண்டு செல்ல விரும்புவோருக்கு, குறைந்த செலவில் சிறப்பான தீர்வுகளை நார்த் ஈஸ்டர்ன் கேரியிங் கார்ப்பரேஷன் வழங்குகிறது. அதன் சேவைகளுள் சரக்கு மேலாண்மை மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட தளவாட தீர்வுகளின் விரிவான அணிவரிசை உள்ளடங்கும். தானியக்க ஈ ஆர் பி-அடிப்படையிலான மென்பொருள் அமைப்பு இதன் தீர்வுகளுக்கும், சேவைகளுக்கும் ஆதரவளிக்கிறது. அதன் செயல்பாட்டு நிபுணத்துவம், விரிவான போக்குவரத்து வலையமைப்பு மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பம் ஆகியவற்றைப் பயன்படுத்தி நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளிலும் மற்றும் இந்தியா முழுவதிலும் நேர்த்தியான போக்குவரத்து சேவைகளை திறம்பட வழங்க இந்நிறுவனத்தின் பணியாளர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றனர்.

# சிங்கப்பூரைச் சேர்ந்த க்ரீன் பாய்ண்ட் பி. லிட் கையகப்படுத்தலை பூர்த்தி செய்திருக்கும் சர்வேஷ்வர் ஃபுட்ஸ்

சென்னை, 12 ஏப்ரல் 2024: உணவு தொழில்துறையில் புகழ்பெற்ற நிறுவனமான சர்வேஷ்வர் ஃபுட்ஸ், அதன் முந்தைய அறிவிப்பை செயல்படுத்தும் வகையில் சிங்கப்பூரைச் சேர்ந்த க்ரீன் பாய்ண்ட் பிரைவேட் லிமிடெட் என்பதன் 100% சாதாரணப் பங்குகளை (எ.கா. ஒரு சிங்கப்பூர் டாலர் முகமதிப்புள்ள) வாங்குவது மற்றும் அந்நிறுவனத்தின் பிசினஸை கையகப்படுத்தும் செயல்நடவடிக்கையைப் பூர்த்தி செய்திருப்பதாக அறிவித்திருக்கிறது. எனவே இதற்குப் பிறகு சர்வேஷ்வர் ஃபுட்ஸ் லிமிடெட் - க்கு முற்றிலும் சொந்தமான ஒரு துணை நிறுவனமாக க்ரீன் பாய்ண்ட் செயல்படும். 2023 மார்ச் 31 தேதியிட்ட நிதிசார் அறிக்கையின்படி யூஎஸ்$ 3,139,471என்ற விற்றுமுதலை க்ரீன் பாய்ண்ட் பிரைவேட் லிமிடெட் கொண்டிருந்தது. இதற்கு முன்னதாக, ஏறக்குறைய 6 மில்லியன் யுஎஸ். டாலர் (~ரூ.50 கோடிகள்) மதிப்புள்ள 90,000 குவிண்டால் ப்ரீமியம் அரிசியை ஆஃப்ரிக்காவிற்கு, நமது இந்திய அரசின் ஒருங்கமைப்பு முகமையான என் ஏ எஃப் ஈ டி வழியாக வழங்குவதற்கான ஆர்டரை வெற்றிகரமாக பெற்றிருப்பதை இந்நிறுவனம் தெரிவித்திருந்தது. உலகெங்கிலும் உள்ள நுகர்வோர்களுக்கு ஊட்டச்சத்தையும், மகிழ்ச்சியையும் சேர்த்து வழங்கும் உயர்தர அரிசி வகைகளை வழங்குவதற்கான தனது செயல்திட்டத்தை சர்வேஷ்வர் ஃபுட்ஸ் வலுவாக மேற்கொண்டு வருகிறது. என் ஏ எஃப் ஈ டி (இந்தியாவின் தேசிய வேளாண் கூட்டுறவு சந்தையாக்கல் கூட்டமைப்பு லிமிடெட்) என்பது, இந்தியாவில் வேளாண் விளைபொருட்களுக்கு சந்தையாக்கல் செய்யும் கூட்டுறவு அமைப்புகளுக்கான அரசின் தலைமை அமைப்பாகும்.

வேளாண் விளைபொருட்கள், வனவள ஆதாரங்கள், ஆகியவற்றின் வர்த்தகத்தை ஊக்குவிப்பது வேளாண், தோட்டப்பயிர் மற்றும் வன விளைபொருட்களின் சந்தையாக்கலையும், பதப்படுத்தலையும், சேமிப்பையும் ஊக்குவிப்பது மற்றும் மேம்படுத்துவது, வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பிற உள்ளீட்டுப் பொருட்களின் வினியோகம், மாநிலங்களுக்கு இடையில் வர்த்தகம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றை மேற்கொள்வது, வேளாண்மை உற்பத்தியில் தொழில்நுட்ப ஆலோசனை பெற விவசாயிகளுக்கு உதவுவது, கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள், அசோஸியேட்ஸ்களின் செயலாற்றலை மேம்படுத்துவது, நாடெங்கிலும் இயங்கும் சந்தையாக்கல், பதப்படுத்தல் மற்றும் வளங்களுக்கான கூட்டுறவு சங்கங்களுக்கு ஆதரவளிப்பது என்ற குறிக்கோளுடன் நிறுவப்பட்டு திறம்பட செயலாற்றி வரும் நிறுவனமாக என் ஏ எஃப் ஈ டி திகழ்கிறது.

# 'லவ் டுடே' மாபெரும் வெற்றியை தொடர்ந்து மீண்டும் இணையும் ஏஜிஎஸ் என்டெர்டைன்மென்ட் மற்றும் பிரதீப் ரங்கநாதன் திரைப்படத்தின் அறிமுக வீடியோ ரசிகர்களிடம் அதிரடி வரவேற்பை பெற்றுள்ளது



சென்னை, 12 ஏப்ரல் 2024: தென் இந்தியாவின் முன்னணி தயாரிப்பு நிறுவனமான ஏஜிஎஸ் என்டெர்டைன்மென்ட் தயாரித்து, பிரதீப் ரங்கநாதன் இயக்கி நடித்த 'லவ் டுடே' அனைத்து தரப்பு ரசிகர்களையும் கவர்ந்து மாபெரும் வெற்றி பெற்றதை தொடர்ந்து இந்த வெற்றி கூட்டணி மீண்டும் இணைகிறது.

கல்பாத்தி எஸ். அகோரம், கல்பாத்தி எஸ். கணேஷ், கல்பாத்தி எஸ். சுரேஷ் தயாரிக்கும் இந்த புதிய படத்தை 'ஓ மை கடவுளே' புகழ் அஷ்வத் மாரிமுத்து எழுதி இயக்க பிரதீப் ரங்கநாதன் நாயகனாக நடிக்கிறார். முன்னணி நடிகர்கள் முக்கிய வேடங்களில் நடிக்கவுள்ள இன்னும் பெயரிடப்படாத இத்திரைப்படத்தின் படப்பிடிப்பு வரும் மே மாதம் தொடங்கி தொடர்ந்து நடைபெறுகிறது. இது ஏஜிஎஸ் என்டெர்டைன்மென்ட் நிறுவனத்தின் 26வது படைப்பாகும்.

கலகலப்பு மிக்க உணர்ச்சிப்பூர்வமான இந்த திரைப்படத்தின் கிரியேட்டிவ் தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி ஆவார். இணை கிரியேட்டிவ் தயாரிப்பாளராக ஐஷ்வர்யா கல்பாத்தி பங்காற்றுகிறார். லியோன் ஜேம்ஸ் இசையில், நிகேத் பொம்மி ஒளிப்பதிவில், பிரதீப் ஈ. ராகவ் படத்தொகுப்பில் இப்படம் உருவாகவுள்ளது. நிர்வாக தயாரிப்பாளர்: எஸ்.எம். வெங்கட் மாணிக்கம்.

புதிய படத்தை அறிவிப்பதற்காக காணொலி ஒன்றை படக்குழு வெளியிட்டுள்ளது. பிரதீப் ரங்கநாதன் மற்றும் அஷ்வத் மாரிமுத்துவின் நிஜ வாழ்க்கை நட்பை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ள நகைச்சுவை ததும்பும் இந்த வீடியோ, வெளியிடப்பட்ட சில நிமிடங்களிலேயே ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்பை பெற்று திரைப்படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியுள்ளது.

படத்தை பற்றி பேசிய கிரியேட்டிவ் தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி, "'லவ் டுடே' திரைப்படத்தின் மூலம் மக்கள் மனதில் இடம் பிடித்த பிரதீப் ரங்கநாதனையும், 'ஓ மை கடவுளே' படத்தின் மூலம் ரசிகர்களை கவர்ந்த அஷ்வத் மாரிமுத்துவையும் இணைப்பதில் ஏஜிஎஸ் என்டெர்டைன்மென்ட் மகிழ்ச்சி அடைகிறது. இந்த புதிய திரைப்படம் அனைத்து தரப்பு ரசிகர்களின் பாராட்டையும் கட்டாயம் பெற்று ஏஜிஎஸ் நிறுவனத்தின் வெற்றிப்பட வரிசையில் இடம் பிடிக்கும்," என்றார்.

இத்திரைப்படத்தின் தலைப்பு, இதில் நடிக்கவுள்ள இதர நடிகர், நடிகைகள் குறித்த தகவல்கள் உள்ளிட்ட அறிவிப்புகள் அதிகாரப்பூர்வமாக ஏஜிஎஸ் என்டெர்டைன்மென்ட் நிறுவனத்தால் உரிய நேரத்தில் வெளியிடப்படும்.